1991 அக்டோபர் 4]

160—

ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்பு கட்ட நிலம் கையகப்படுத்துதல்.

*164—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டத்தைச் சார்ந்த ஒட்டன்சத்திரம் சத்திரப்பட்டி, எடையகோட்டை, கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு கட்டாயமாக நிலங்களை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

(அ) பழனி வட்டத்தைச் சார்ந்த ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிரவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு கட்டாயமாக நிலங்களை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. சத்திரப் பட்டி, எடையக்கோட்டை, கள்ளிமந்தையம் ஆகிய ஊர்களில் அத்தகைய செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) அதன் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

கிராமத்தின் பெயர்.	நிலமெடுப்பு விவரம்.	தற்போதைய நிலை.
(1)	(2)	(3)
1. ஒட்டன் சத்திரம்.	ஒட்டன்சத்திரம் கிராமம் சர்வே எண். பி13/1பி 14/1 பில் 96 பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க 5.68 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.	சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீட்டு மனு எண். 3694/83-ல் நில உரிமையாளர் வழக்குத் தொடுத் துள்ளார். வழக்கு முடிவுறவில்லை.

53-391—5

[1991 அக்டோபர் 4

கிராமத்தின் பெயர். (1)	நிலமெடுப்பு விவரம். (2)	தற்போதைய நிலை. (3)
	ஒட்டன்சத்திரம் கிராமம் உட்கடை சண்முகவேல்புரம் ஆதிதிராவிடர்களுக்கு மயானம் அமைக்க மேற்படி கிராமம் சர்வே எண். 515/3-ல் 0.10.0 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.	4(1) பிரேரணை அரசிற்கு அனுப்பப் பட்டுள்ளது. தனி வட்டாட்சியரின் குறை நிவர்த்தி அறிக்கை அனுப்பப் பட வேண்டியுள் ளது.
2. தொப்பம் பட்டி.	தொப்பம்பட்டி கிராமம் சர்வே எண். 82/2பி-ல் 14 ஆதிதிராவிடர் களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க 0.85 ஏக்கர் நிலம் கையகப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.	சென்னை உயர்நீதி மன்றத்தின் மேல் முறையீட்டு மனு எண்கள் 676/81, 685/81, 2439/81 மற்றும் 2440/81 ஆகியவற்றில் நில உரிமையாளர்கள் வழக்கு தொடுத் துள்ளனர். வழக்கு முடிவுறவில்லை.

திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி ஒட்டன் சத்திரம் சத்திரப்பட்டி, கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி மற்றும் பல கிராமங்களில் ஆதிதிராவிட மக்களின் குடியிருப்புகளுக்கு, அது சம்பந்தப்பட்ட நிலங்களை கையகப்படுத்தும்போது, அந்த நிலத்தின் உரிமையாளர்கள் கோர்ட்டுக்குப்போய் இன் ஜெங்ஷன் வாங்கிவிடுகிறார்கள். அதனால் ஏழை அரிஜனங்கள் வீடு கட்ட முடியாத நிலை ஏற்பட்டு, பல வருடங்கள் ஆகி விடுகின்றன. நிலத்தை எடுக்கும்போது அதிகாரிகள், நிலத்தின் உரிமையாளர்களிடம் கலந்து பேசி, கோர்ட்டுக்கு போகாதவாறு வகை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் 1949 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்

பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் புறம்போக்கு நிலங்கள் கிடைக்காதபோது பட்டா நிலங்கள் கையகப்படுத்தப் பட்டு குடும்பம் ஒன்றுக்கு 3 சென்ட் நிலம் வீட்டு மனைப் பட்டாவாக வழங்கப்படுகிறது. தனியார் நிலங்களைக் கையகப் படுத்தும்போது பின்வரும் முக்கிய வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன:—

(1) உயர் மின் அழுத்த மின் கம்பிகள் செல்லும் நிலங் களைக் கையகப்படுத்தக்கூடாது.

(2) சிறு விவசாயிகள் நிலங்களைக் கையகப்படுத் துவதைத் தவிர்க்க வேண்டும்.

(3) தாழ்வான பகுதிகளில் உள்ள நிலங்களை தவிர்க்க வேண்டும்.

(4) கையகப்படுத்தும் நிலங்களில் குடியேற பயனாளிகள் சம்மதிக்க வேண்டும்.

(5) ஆதி திராவிடர்களின் நிலங்கள் கையகப்படுத்துவதி லிருந்து தவிர்க்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத பட்சத்தில் அவர்கள் சம்மதத்தை எழுத்தில் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திண்டுக்கல்—அண்ணா மாவட்டம், பழனி வட்டம், ஒட்டன் சத்திரம் கிராமம் சர்வே எண் பி. 13/1பி மற்றும் 14/1பி-ல் 96 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க 5.68 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (மணி அடிக்கப்பெற்றது)

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனு மதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : கொப்பம்பட்டி கிராமம் சர்வே எண் 82/2-பி-யில் 14 ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க 0.05 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நில உரிமையாளர் கள் அதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்ததையடுத்து, இறுதி ஆணை பெறப்படாமையால் வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அது எல்லாம் நீங்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையிலேயே இருக்கிறது. விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.